# தொல்காப்பிய மன்றம் - கனடா

## Association for Tolkappiyam - Canada

தொல்காப்பிய வழி, தொன்மைத் தமிழர் வரலாறும் பண்பாடும் அறிவோம்

## முதலாம் உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாடு - 2024


**பேச்சுப் போட்டி: வகுப்பு - 05 (2013-இல் பிறந்தோர்)**

## தொல்காப்பியத்தின் பெருமை

தொல்காப்பியம் தமிழுக்குக் கிடைத்த **முதல் இலக்கண நூல். இதனை எழுதியவர் தொல்காப்பியர்.** தொல்காப்பியம் பொது ஆண்டுக்கு முன் 711 ஆம் ஆண்டு எழுதப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இந் நூல், **ஒரு வளர்ச்சி பெற்ற சமூகத்திலிருந்து பிறந்த நூல்**. தொல்காப்பியம் எழுதப்படுவதற்கு முன்பே, தமிழில், கற்றுத் தேர்ந்த பெருமக்கள் பலர் தோன்றி, பல அரிய இலக்கணக் கோட்பாடுகளை உருவாக்கி இருக்கிறார்கள். அவற்றின் தொடர்பாகவே தொல்காப்பியத்தை நாம் காண்கிறோம். இந் நூல், அக் காலத் **தமிழரின் அறிவின் பரப்பையும் ஆழத்தையும் மரபையும் எடுத்துக் கூறும் ஒரு அரிய நூல். தொல்காப்பியம், இலக்கண நூல் மட்டுமல்ல, ஒப்பற்ற இலக்கியமும் ஆகும்.**

உலகில் இன்று, **வாழும் மொழிகளுள் முன்னிலையில் நிற்கும் மொழி தமிழ் மொழி.** தமிழ் மொழி, ஒரு **செம்மொழியாகும்**. தமிழ் மொழிக்கு, **“செம்மொழி” தகைமையைப் பெற்றுத் தந்ததில் பெரும் பங்கு தொல்காப்பியத்திற்கு** உண்டு.
வடக்கே வேங்கட மலைக்கும் தெற்கே குமரி முனைக்கும் இடைப்பட்டு இருந்த **பெரு நிலப் பரப்பில் வழங்கப்பட்ட தமிழ் மொழிக்கு இலக்கணம் வகுத்த பெருமை தொல்காப்பியரையே சாரும்**.

தொல்காப்பியம், **எழுத்து, சொல், பொருள்** என்னும் மூன்று அதிகாரங்களைக் கொண்ட இலக்கண நூலாகும். வேறு எம் மொழியிலும் இல்லாதவாறு தொல்காப்பியர், எழுத்துக்கும் சொல்லுக்கும் மட்டும் அல்லாது **வாழ்வியலுக்கும் இலக்கணம் வகுத்துள்ளார்.** சங்க இலக்கியங்களின் **வாழ்வியல் ஒழுக்கங்களைப் பாடுவதற்கு உரிய இலக்கணம் வகுத்தது தொல்காப்பியப் பொருளதிகாரம்**. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என, **நில அடிப்படையில், ஒழுக்கங்களை வகுத்து** இலக்கியம் படைத்த பெருமை தொல்காப்பியரையே சாரும்.

உயிர் எழுத்துக்கள் 12 என்றும், மெய் எழுத்துக்கள் 18 என்றும், ஆக மொத்தம் தமிழில் முதல் எழுத்துக்கள் 30 என்றும் வரையறுத்தது தொல்காப்பியமே. தொல்காப்பியத்தைத் தொடர்ந்து பல இலக்கண நூல்களைத் தமிழ் இலக்கண வரலாறு கண்டிருக்கிறது. ஆனாலும், **முதல் எழுத்துகளின் எண்ணிக்கை 30 ஆகவே** இன்றும் இருப்பது தொல்காப்பியத்தின் சிறப்பாகும்.

தொல்காப்பியத்தை **அறிவியல் நோக்கில் அணுகினால்**, அறிவியல் சார்ந்த பல ஆழமான கருத்துக்கள் ஆங்காங்கே கிடக்கக் காணலாம். இன்று நாம் காணும் அறிவியல் கருத்துக்களின் பல்வேறு பகுதிகளை, 3000 ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் மக்கள் அறிந்திருக்கிறார்கள் என்பதைத் தொல்காப்பியம் மூலம் அறிகிறோம்.

"ஒன்று அறிவதுவே உற்று அறிவதுவே
இரண்டு அறிவதுவே அதனொடு நாவே
மூன்று அறிவதுவே அவற்றொடு மூக்கே
நான்கு அறிவதுவே அவற்றொடு கண்ணே
ஐந்து அறிவதுவே அவற்றொடு செவியே
ஆறு அறிவதுவே அவற்றொடு மனனே
**நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே**"

என்று உலகிலுள்ள அனைத்து உயிரினங்களையும் அவ் உயிரினங்களின் அறிவு அல்லது புலன்களின் அடிப்படையில் ஆறு வகையாகப் பிரித்துக் கூறியுள்ளமை தொல்காப்பியத்தின் சிறப்பு அல்லவா?

உலக அரங்கிலே பண்டைத் தமிழரின், தொன்மை, மொழித் திறன், அறிவியல் ஞானம், இலக்கியச் செறிவு, பண்பாட்டு வளம், மரபுகள் முதலியவை கட்டுக்குலையாமற் காத்து நிற்கும் உன்னதமான ஆவணம் தொல்காப்பியம்.

வாழ்க தமிழ்

நன்றி, வணக்கம்.